## இந்தக் கல்லறைகள் பேசுவது அந்தக் கயவர்களுக்குப் புரிவதேயில்லை. ஆகவே நாளைய கல்லறைகள் சற்று பேசவேண்டி உள்ளது.....

---

### எம் மக்களே !

இன்னும் நீ மௌனமாக ஏன் இருக்கின்றாய். அராஜகம் உன் தொண்டைக் குழிக்கே வந்துவிட்டது. இன்னும் ஏன் நீ மௌனித்திருக்கின்றாய். போராட்டம் உனக்குப் புதியதல்ல. அடக்குமுறை எங்கிருந்து வந்தாலும் போராடியே தீரவேண்டும்.

அடிமைக்குள் அடிமையிங்கே. ஆகவே போராட்டத்துக்குள் போராட்டம் நடத்த வேண்டியது காலம் உணர்த்தும் கட்டாயம்.

### எம் மக்களே சற்று திரும்பி பாருங்கள்!

ஈழத்தாயின் விடுதலைக்கு உரத்து ஒலித்த குரல்கள் பல ஈழத்தாயின் மேனியினுள்ளே அமுங்கிப்போன கதை எத்தனை. எம்மினக்காவலர்களின் அராஜகத்தை விழுங்கமுடியாமல் கக்கியவர்கள் பலர் சமூக விரோதியாய், துரோகியாய் மின்கம்பத்தை அணைத்த கதை எத்தனை. எம் மண்ணைநேசித்த, எம்மக்களை நேசித்த பலர் நடுத்தெருவில் நாய்போல சுட்டுக் கொழுத்தப் பட்ட கதை எத்தனை.

எம் மக்களை அழிக்கவந்த சிங்கள இராணுவத்தின் உடல்கள் சந்தனப் பெட்டியிலே சகல மரியாதையுடனும் உரியவரிடம் கையளிப்பு எம் மக்களைக் காப்பதற்கு வாழ்க்கையைத் தியாகம் செய்து போராட்டத்தில் இறங்கிய எம்மவர்களின் உடல்கள் தெரு நாயில் கேவலமாக நடுத்தெருவில் வீசப்பட்டு பெற்றோல் ஊற்றப்பட்டு அனாதையாய் கருக்கப்பட்டது.

இன்று.........

அராஜகத்துக்கு எதிராக நியாயத்தை ஓங்கி ஒலித்ததற்காக பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் மர்ம மறைவு......

பேச்சு சுதந்திரம் இருக்கிறது என்ற நினைவில் நியாயத்திற்காகக் குரல் கொடுத்த விஜிதரனைக் காணவில்லை.... ....

# விஜிதரன் எங்கே!

எம் மக்களே!

குடா நாடு எமது பூரண கட்டுப்பாட்டினுள்... ... இயக்கங்கள் அறிவிப்பு
வடக்கில் சிவில் நிர்வாகம் இல்லை......... ஸ்ரீலங்கா எதிர்கட்சியின் குற்றசாட்டு
வரி விதிப்பு, லைசென்ஸ் அறிமுகம், செயலகம் திறக்கப்படும் ........ பத்திரிகை செய்திகள்
இத்தனையும் கொண்ட யாழ்நகரில்தான் விஜிதரனைக் காணவில்லை ... ...

### எம் இனிய மக்களே !

தமது தோழன் விஜிதரனுக்கு மட்டுமல்ல. சகல தமிழ் பேசும் மக்களையும் அராஜகத்தில் இருந்து காப்பாற்ற அராஜகத்தின் ஆணி வேரை களைந்தெறிய ஈழ விடுதலைப் போராட்டத்தை புதிய முனைப்புடன் செயல்படுத்த இன்று பல்கலைக்கழக மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள். தமிழ் ஈழ கோரிக்கையின் ஆரம்பமாய், ஆயுதப் போராட்டத்தின் அடித்தளமாய் ஒலித்த குரல்கள் இன்று அராஜகத்துக்காக குரல் கொடுக்கின்றன.

அவர்கள் சக்தி தீயை விடபெரியது. இயக்கங்களே ! அவர்கள் குரலுக்கு செவிசாயுங்கள். விஜிதரனை விடுதலை செய்யுங்கள். பொது மக்களே ! மாணவரின் நியாயமான போராட்டத்தில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள்.

நீங்கள் இனியும் பார்வையாளராக இருந்தால் உங்களுக்காக பரிதாபப்படுகிறோம்.

**வெல்க நியாய போராட்டம் ! வெல்க தமிழீழம் ! !**

- இணுவில் மாணவர்கள் -